<u>மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், இலுப்பூர்</u>

**முன்னிலை: திருமதி. சாதத்துனிஷா, பி.ஏ. பி.எல்.,**

மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல்
நீதித்துறை நடுவர், இலுப்பூர்.

2026ம் ஆண்டு மார்ச் திங்கள் 12ம் நாள் வியாழக் கிழமை

**<u>CRLMP.NO. 227/2025 IN CC.No. 42/2025</u>**

தமிழக அரசுக்காக காவல் ஆய்வாளர்
அன்னவாசல் காவல் நிலையம் ..... மனுதாரர்/குற்றமுறையீட்டாளர்

... எதிர் ...

பழனிமுத்து ..... எதிர்மனுதாரர்

இம்மனுவானது என் முன்பாக கடந்த 07.03.2026–ம் தேதியில் இறுதி விசாரணைக்காக வந்தபொழுது மனுதாரர் தரப்பில் கற்றறிந்த அரசு தரப்பு வழக்கறிஞர், அவர்கள் முன்னிலையாகியும், எதிர்மனுதாரர் தரப்பில் கற்றறிந்த வழக்குரைஞர் திரு.P.அழகர், அவர்கள் முன்னிலையாகியும், இரு தரப்பு சாட்சி மற்றும் சான்றாவணங்கள் பரிசீலனை செய்யப்பட்டும், இதுநாள் வரை இந்நீதிமன்ற பரிசீலனையில் இருந்து வந்து இன்று இந்நீதிமன்றம் பிறப்பிக்கும்..

<u>உத்தரவு</u>

1) இம்மனுவானது கு.வி.மு.ச பிரிவு 323 ன் கீழ் இந்த அசல் வழக்கை ADJ நீதிமன்றத்திற்கு மேல் விசாரணைக்கு அனுப்ப வேண்டி மனுதாரர் தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. மேலும் மனுதாரர் தனது மனுவில், இவ்வழக்கின் எதிர் வழக்கான SC 08/2025 புதுக்கோட்டை ADJ நீதிமன்றத்தில் நிலுவையில் இருப்பதாகவும், எனவே பரிசீலனையில் உள்ள இவ்வழக்கை கு.வி.மு.ச பிரிவு 323 ன் கீழ் விசாரணைக்காக ADJ நீதிமன்றத்திற்கு அனுப்பி வைக்குமாறு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. மேலும் மனுதாரர் தரப்பு மனுவுடன் மேற்கண்ட SC 08/2025ன் முதல் தகவல்

அறிக்கை நகல் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2) எதிர்மனுதாரர் தரப்பில் இம்மனுவை அனுமதிக்க எவ்வித ஆட்சேபனையும் தாக்கல் செய்யப்படவில்லை.

3) மனுதாரர் தரப்பு கேட்கப்பட்டது. ஆவணங்கள் பரிசீலிக்கப்பட்டது. மனுதாரர் தரப்பில் பரிசீலனையில் உள்ள வழக்கின் எதிர்வழக்கு புதுக்கோட்டை ADJ நீதிமன்றத்தில் நடப்பதால் இவ்வழக்கையும் ADJ நீதிமன்றத்திற்கு மாற்ற மனு தாக்கல் செய்யப்பட்டுள்ள நிலையில், இந்நீதிமன்றம் குற்றவியல் நடைமுறை விதி 33(4) ஐ கருத்தில் எடுத்துக் கொள்கிறது.

மேற்படி, விதி 33 (4) ஆனது வழக்கும், எதிர்வழக்கும் இருந்து அவற்றில் ஒன்று அமர்வு நீதிமன்றத்தால் விசாரிக்கத்தக்கது என்றும், மற்றொன்று நீதித்துறை நடுவரால் விசாரிக்கத்ததக்கது என்றும், நீதித்துறை நடுவருக்கு தோன்றும் இடத்து அவர் பிந்தைய வழக்கையும், சட்டப்பிரிவு 323ன் கீழ், அமர்வு நீதிமன்றத்திற்கு விசாரணைக்காக அனுப்பி அவ்வாறு அனுப்பியதற்கான காரணத்தை பதிவு செய்ய வேண்டும் என்று கூறுகிறது. மேற்படி விதியில் எதிர்வழக்கு குறித்து தெளிவாக கூறப்பட்டுள்ளது.

மேலும், மேற்கண்ட விதியின் படி, பரிசீலனையில் உள்ள வழக்கில் கூறப்படும் அதே சம்பவ தேதியில், அதே சம்பவ நேரத்தில், அதே சம்பவ இடத்தில் இவ்வழக்கின் புகார்தாரர் மற்றும் பலர் சட்டவிரோதமாக ஒன்றுகூடி இவ்வழக்கின் எதிரியை அசிங்கமாக பேசியதாகவும், கையாலும், கம்பாலும் தாக்கியும், மேலும் மறைத்து வைத்திருந்த அரிவாளால் தலை மற்றும் காலில் வெட்டியதாகவும் இவ்வழக்கின் புகார்தாரர் மற்றும் பலர் மீது அன்னவாசல்

காவல் நிலையத்தில் புகார் கொடுக்கப்பட்டு, அதன் பேரில் குற்ற எண். 328/2020 என்ற எண்ணில் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டு எதிர்வழக்கு SC 08/2025 என்ற எண்ணில் புதுக்கோட்டை ADJ நீதிமன்றத்தில் நிலுவையில் உள்ளது என்பது தெரியவருகிறது. எனவே மேற்கண்ட விதியின் படி, மேற்படி SC 08/2025 என்ற வழக்கானது அமர்வு நீதிமன்றத்தால் விசாரணை செய்யப்பட்டு வரும் நிலையில், அதன் பிந்தைய வழக்கான பரிசீலனையில் உள்ள இவ்வழக்கை சட்டப்பிரிவு 323ன் கீழ் அமர்வு நீதிமன்றத்திற்கு அனுப்பி வைக்க இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது.

எனவே மேற்கண்ட அனைத்து பரிசீலனைகளின் அடிப்படையில், பரிசீலனையில் உள்ள வழக்கு கூடுதல் அமர்வு நீதிமன்றத்தால் விசாரிக்கத்தக்கது என்பது தெரியவருவதால், மனுதாரர் தரப்பில் கு.வி.மு. ச பிரிவு 323ன் கீழ், இந்த அசல் வழக்கை அமர்வு நீதிமன்றத்திற்கு மேல் விசாரணைக்கு அனுப்ப வேண்டி தாக்கல் செய்யப்பட்டுள்ள இம்மனுவை அனுமதிக்க இந்நீதிமன்றம் உத்தரவிடுகிறது.

**இறுதியாக இம்மனு அனுமதிக்கப்படுகிறது. செலவுத் தொகை இல்லை.**

இந்த உத்தரவு என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு என்னால் சரிபார்க்கப்பட்டு இன்று 2026ம் ஆண்டு மார்ச் திங்கள் 12-ம் நாள் நாள் இத்திறந்த நீதிமன்றத்தில் அவையறியப்பகரப்பட்டது.

M SATHATHUNISHA
Digitally signed by M SATHATHUNISHA
Date: 2026.03.12 16:44:48 +0530

ஓம்/சாதத்துனிஷா

மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல்
நீதித்துறை நடுவர், இலுப்பூர்.

மனுதாரர்கள் தரப்பு சாட்சி மற்றும் சான்றாவணங்கள் – இல்லை
எதிர்மனுதாரர்கள் தரப்பு சாட்சி மற்றும் சான்றாவணங்கள் – இல்லை

M SATHATHUNISHA

Digitally signed by M SATHATHUNISHA
Date: 2026.03.12 16:44:57 +0530

ஒம்/சாதத்துனிஷா.

மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல்
நீதித்துறை நடுவர், இலுப்பூர்.